# கொக்குவில் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் (கனடா)
## KOKUVIL HINDU COLLEGE
## OLD STUDENTS ASSOCIATION (CANADA)
## 2018

*18 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்*
*பேச்சுப் போட்டி*

## ஆறுமுகநாவலர்

*சைவசமயத்திற்கும், தமிழ்மொழிக்கும் அரும்பெரும் தொண்டாற்றிய பெருமகனார் ஆறுமுகநாவலர் ஆவார். இவர் 1822 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்தார். இவரின் தந்தையார் பெயர் கந்தப்பிள்ளை. தாயார் பெயர் சிவகாமி அம்மையார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் ஆறுமுகம். தமிழ்நாட்டின் திருவாவடுதுறை ஆதீனமே இவரது சைவத் தமிழ்ப் பணிகளைப் பாராட்டி ''நாவலர்'' என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அன்றுமுதல் இவர் ஆறுமுகநாவலர் என அழைக்கப்பட்டார்.*

*இவர் வாழ்ந்து பணியாற்றிய காலம் இலங்கையும் இந்தியாவும் ஆங்கிலேயர் ஆட்சி செய்த காலமாகும். மக்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்தனர். தமிழும் சைவமும் சிறப்பிழந்த நிலையில் காணப்பட்டன. இத்தகைய சூழ்நிலையே அவரை சைவத்தையும், தமிழையும் வளர்க்கத் தூண்டியது.*

*இவர் இளமைப் பருவத்திலேயே கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்து விளங்கினார். சிவபக்தி நிறைந்தவராகவும், சைவசமய விதிமுறைகளைக் கடைப்பிடிப்பவராகவும் திகழ்ந்தார். சைவசமயச் சூழலில் பிள்ளைகள் கல்வி கற்கவேண்டும் என்பதை உணர்ந்த அவர் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார்.*

*சமய நூல்களையும், பாடநூல்களையும் எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார். சைவசமயத்திற்கும், பண்பாட்டிற்கும் எதிராக அக்காலத்தில் எழுந்த செயற்பாடுகளுக்கெல்லாம் நாவலர் தகுந்த பதில் அளித்தார். சைவமும் தமிழும் அவரால் காப்பாற்றப்பட்டன. சைவத்தைவிட்டு பிறமதத்தில் புகுந்தோரில் பலர் சைவசமயத்தின் உண்மையை உணர்ந்தனர். நாவலர் சமயத்தொண்டுடன் சமூகத்தொண்டும் புரிந்தார். சைவப்பிரசங்கங்கள் செய்தார். இதன்மூலம் மக்கள் மதம் மாறுவதைத் தடுத்தார்.*

*ஐந்தாம் குரவரெனப் போற்றப்பட்ட ஆறுமுகநாவலர், 1879 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் மகநட்சத்திரத்தில் இறைவனடி சேர்ந்தார். சைவமும் தமிழும் தனது இரு கண்களெனப் போற்றி வாழ்ந்தவர் அவர். நல்லைநகர் ஆறுமுகநாவலர் முத்தி அடைந்த தினத்தில் இன்றும் அவர்பொருட்டுக் குருபூசை நடாத்தப்பட்டு வருகின்றது.*